செ.வெ.எண்:36 நாள்:15.11.2019

**தூத்துக்குடி மாவட்டம் புனித மரியன்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பொன்விழா ஆண்டு நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பள்ளி மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.**

---

தூத்துக்குடி மாவட்டம் புனித மரியன்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பொன்விழா (50வது ஆண்டு) நிகழ்ச்சியில் இன்று (15.11.2019) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, பள்ளி மாணவர்களுக்கு 1500 மரக்கன்றுகளை வழங்கி, தங்களது வீடுகளில் வளர்க்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

பள்ளி மாணவ, மாணவியர்கள் சிறு வயதிலிருந்தே எதிர்காலத்தில் என்ன ஆக வேண்டும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். இதற்கு பள்ளி காலத்தில் இருந்து நன்றாக படித்து அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும். தாங்கள் படிக்கும் போது அதனை நன்றாக புரிந்து படிக்க வேண்டும். இதில் ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் ஆசிரியர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். தினந்தோறும் நாளிதழ்கள் படித்து அன்றாட நாட்டு நடப்புகளை தெரிந்து கொள்ள வேண்டும். தினந்தோறும் குறைந்த பட்சம் அரை மணிநேரமாவது நாளிதழ்கள் படித்து அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும், தாங்களது பள்ளியில் நடக்கும் அனைத்து போட்டிகளிலும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். போட்டிகளில் தோல்வி அடைந்தாலும், வெற்றி பெறும் வகையில் தொடாந்து போராடிக் கொண்டு இருந்தால் நிச்சயமாக வெற்றி பெற முடியும். போட்டிகளில் தொடர்ந்து கலந்து கொண்டால் தங்களது தன்னம்பிக்கை மற்றும் திறமைகள் வளர்த்துக் கொள்ள முடியும். இதன் மூலம் பிற்காலத்தில் நீங்கள் எதிர்கொள்ளும் அனைத்து போட்டிகளும் மிகவும் எளிதாக இருக்கும். கல்வி கற்பது மட்டுமல்லாமல் விளையாட்டுகளுக்கும் மாணவர்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் உறுதுணையாக இருக்க வேண்டும். புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தினை பள்ளி காலங்களிலிருந்து கடைபிடிக்க வேண்டும். மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த நிலை அடைய ஆசிரியர்கள் கையில் தான் உண்டு என்பதை மனதில் வைத்து ஆசிரியர்களும் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்ற வேண்டும். மாணவர்களும் பெற்றோர்களுக்கு இணையாக ஆசிரியர்களையும் மதித்து கல்வி கற்று சிறந்த நிலை அடைய வேண்டும். ஏற்கனவே இந்த பள்ளியில் படித்த மாணவர்கள் தற்போது சிறந்த நிலை அடைந்துள்ளார்கள். இவர்களை நீங்கள் ஒரு எடுத்துக்காட்டாக எடுத்துக் கொண்டு நன்றாக படித்தால் நீங்களும் எதிர்காலத்தில் நல்ல நிலை அடைய முடியும். இன்று, பள்ளி தற்போது 50வது ஆண்டு விழா சிறப்பாக கொண்டாடி வருகிறது. மேலும், நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெறுவதற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், துணை வேந்தர், புனித சவேரியார் பல்கலைக் கழகம், கொல்கத்தா, அருட்தந்தை.முனைவர்.சே.ச.பெலிக்ஸ் ராஜ், புனித மரியன்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தாளாளர் அருட்சகோ.ஜ.ஜோசப் அவர்கள், தலைமையாசிரியர் அருட்சகோ.அ.மரிய ஜோசப் அந்தோணி அவர்கள் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.